## இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம் - 2013

இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புகளும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் காட்டப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கையாகவும் இந்த அறிக்கையினை கருதுதல் வேண்டும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குபோதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனதுநிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ‘‘டிரான்ஸ்போமர்களை’’ வழங்கி பொருத்துவதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 11,999,504 தொகைக்குரிய வேலைகள் 2013 மே 07 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை சொத்தாக காண்பிப்பதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் நடைபெற்றுவரும் வேலையாக காட்டப்பட்டிருந்தது

(ஆ) குவைத் நிதியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு 2012 இல் பல்கலைக்கழகத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த ரூபா 148,871,450 பெறுமதியான இருபத்திரெண்டு பதவியணியினர் விடுதிகள் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளக வீதியினை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,906,496 வேலை ஆரம்பித்தல் முற்பணத்தினை வேறுபடுத்தி முற்பணமாக காண்பிப்பதற்குப் பதிலாக கட்டிடங்களின் பெறுமதியுடன் சேர்க்கப்பட்டிருந்தது.

**2.2.2 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

முகாமைத்துவக் குழுவின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒரு அமர்வுக்காக ரூபா 2,000 வீதம் செலுத்தப்பட்டிருந்த ரூபா 72,000 மொத்தமான அமர்வுப் படிக்கு மேலதிகமாக வெளிவாரி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்ட மற்றும் கற்றல் நிலையத்தின் 10 அங்கத்தவர்களிற்காக மாதாந்த அடிப்படையில் ரூபா 788,093 கூட்டுத்தொகை கௌரவ செலுத்துகையாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

‘‘கௌரவ கொடுப்பனவு முகாமைத்துவ சபையின் பரிந்துரையுடனும் ஆளுகைச் சபையின் அங்கீகாரத்துடனும் செலுத்தப்பட்டிருந்தது என உப வேந்தர் எனக்கு அறிவித்திருந்தார்.’’

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 109 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் அரசாங்க வர்த்தமானியில் இது வரை வெளியிடப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம்கள் (நி.பி.) | |
| (i) நி.பி. 138 | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 253,000 கூட்டுத்தொகையான இரண்டு கொடுப்பனவுகள் சான்றுறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 702(3) | ரூபா 105,706,404 பெறுமதியான 22 ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபனவிதிக் கோவையின் X ஆம் அத்தியாயத்தின் 20.6 ஆம் பிரிவு | பதின்மூன்று கல்வி சாராத மற்றும் நிர்வாக பதவியணியினர் மீளாய்வாண்டில் 223 நாட்கள் சம்பளமற்ற விடுமுறைகளை பெற்றிருந்தனர். இருப்பினும், இந்த சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்களை படிவம் பொது 96 இல் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பல்கலைக்கழகம் அறிவித்திருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்ள முன்னர் ரூபா 577,710,687 பற்றாக்குறையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 442,113,071 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 135,597,616 ஆன வீழ்ச்சி காட்டப்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 3,009,901 ஆல் குறைவடைந்தும் செலவினம் ரூபா 132,587,716 ஆல் அதிகரித்தும் இருந்தமையே இந்த வீழ்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயலாற்றல் பின்வருமாறு காணப்பட்டது.

**(அ) பட்டப் பாடநெறிகள்**

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒவ்வொரு பீடத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டங்களைப் பெற்று வெளியேறிச்சென்ற மாணவர்களின் எண்ணிக்கை கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| நடாத்தப்பட்ட பட்டப் பாடநெறிகள் | பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | பட்டங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 |
| பிரயோக விஞ்ஞானம் | 243 | 273 | 33 | 43 |
| கலை மற்றும் கலாச்சாரம் | 418 | 128 | 134 | 179 |
| முகாமைத்துவமும் வர்த்தகமும் | 376 | 354 | 167 | 106 |
| இஸ்லாமிய மற்றும் அரபு மொழி | 231 | 261 | 107 | 88 |
| பொறியியல் | 102 | - | - | - |
| | 1,370 | 1,016 | 441 | 416 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கலை மற்றும் கலாச்சார பீடத்திற்கும் முகாமைத்தவ மற்றும் வர்த்தக பீடத்திற்கும் மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 226 சதவீதத்தினாலும் 6 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்த அதேவேளை பிரயோக விஞ்ஞான பீடத்திற்கும் இஸ்லாமிய மற்றும் அரபு மொழி பீடத்திற்கும் மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 11.0 சதவீதத்தினாலும் 11.5 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

(ii) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, கலை மற்றும் கலாச்சார பீடத்திற்கு 250 மாணவர்களை உள்வாங்குவதற்கு பல்கலைக்கழகம் பிரேரித்திருந்தது. இருப்பினும், 418 மாணவர்கள் மீளாய்வாண்டில் பீடத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக, 168 மாணவர்கள் பிரரேரிக்கப்பட்ட எல்லைக்கும் மிகையாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

**(ஆ) மாணவரொருவருக்கான கிரயம்**

மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தினதும் மொத்தக் கிரயம் மற்றும் அதன் மீதான மாணவரொருவருக்கான சராசரிக் கிரயம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | பிரயோக விஞ்ஞானம் | கலை மற்றும் கலாச்சாரம் | இஸ்லாமிய மற்றும் அரபு மொழி | முகாமைத் துவமும் வர்த்தகமும் | பொறியியல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா 000) | 72,657 | 66,490 | 29,600 | 52,861 | 15,099 | 236,707 |
| மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 481 | 748 | 602 | 915 | 99 | 2,845 |
| மாணவரொருவருக்கான கிரயம் (ரூபா 000) | 151 | 90 | 49 | 58 | 152 | 83 |

பொறியியல் பீடத்தில் அதிகூடிய மாணவரொருவருக்கான கிரயமான ரூபா 152,000 தொகை அறிவிக்கப்பட்டிருக்கையில் ஆகக் குறைந்த மாணவரெருவருக்கான கிரயமான ரூபா 49,000 இஸ்லாமிய மற்றும் அரபு மொழி பீடத்திலிருந்து அறிவிக்கப்பட்டிருந்தது.

### 4.2 பரீட்சைகளின் பெறுபேறுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 யூலை 14 ஆந் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 636 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, பரீட்சை திகதியின் பின்னர் மூன்று மாதங்களிற்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படுதல் வேண்டும். இருப்பினும், பரீட்சைப் பெறுபேறுகள் 02 மாதங்களால் தாமதிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011/2012 கல்வி ஆண்டில் வணிக நிர்வாக முதுமானி (எம்பீஏ) பாடநெறிக்காக பதிவுசெய்யப்பட்டிருந்த 41 மாணவர்களில் 09 மாணவர்கள் மாத்திரமே இது வரை பட்டங்களை பூரணப்படுத்தியிருந்தனர்.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 சனவரி 10 ஆந் திகதியன்று பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த போதிலும், உடன்படிக்கையினை முறித்துக்கொண்டமைக்காக விரிவுரையாளரிடமிருந்து ரூபா 8,942,758 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2010 சனவரி 22 ஆந் திகதி முதல் பதவி வறிதாக்கப்பட்டிருந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவருடன் தொடர்புடைய ரூபா 1,581,737 தொகை இது வரை நிலுவையாக உள்ளது. இருப்பினும், இத் தொகையினை அவரது பல்கலைக்கழக சேமலாப நிதியித்திலிருந்து அறவிடுவதற்கு அல்லது அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கு பல்கலைக்கழகம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**4.4 பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்தல்**

**சிற்றலுமாரிகளுடன் கூடிய கட்டில்களின் கொள்வனவு**

சிற்றலுமாரிகளுடன் கூடிய 245 கட்டில்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தினை பல்கலைக்கழகம் தனியார் வழங்குனர் ஒருவருக்கு கையளித்திருந்ததுடன் 2013 நவம்பர் 21 வரை அதற்காக ரூபா 3,185,000 தொகையினை செலுத்தியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்குனருக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவுக் கட்டளையின் படி, சிற்றலுமாரிகளுடன் கூடிய 145 கட்டில்கள் 2013 யூலை 01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வழங்கப்படுதல் வேண்டும். இருப்பினும், வழங்குனர் சிற்றலுமாரிகளுடன் கூடிய அக் கட்டில்களை 02 முதல் 05 மாதங்கள் வரையான காலவீச்சிலமைந்த தாமதத்துடன் வழங்கியிருந்தார். வழங்குனர் அக் கட்டில்களை குறிப்பிடத்தக்க தாமதத்துடன் வழங்கியிருந்த போதிலும், கொள்வனவுக் கட்டளையில் தாமதக் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான ஏற்பாட்டினை உள்ளடக்கியிருக்காமையால் வழங்குனரிடமிருந்து தாமதக் கட்டணத்தை பல்கலைக்கழகம் அறிவிட முடியாதிருந்தது.

(ஆ) 2013 மார்ச் 27 ஆந் திகதி இடம்பெற்ற வழங்கல் சபைக் கூட்டத்தின் படி, 6’.0” x 2’.5” அளவுடைய கட்டில்களைக் கொள்வனவு செய்வதற்கு சபை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தைக் கருத்திற்கொள்ளாது 7’.6” x 2’.6” அளவுடைய சிற்றலுமாரிகளுடன் கூடிய கட்டில்களைக் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன.

(இ) குறுத்துரைப்புகளின் படி, 2’ – 2” (2” x 2”) நீளம் கொண்ட தேக்கு மரம் கட்டிலின் நடுவில் பொருத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், 2014 பெப்ரவரி 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவ்வாறான தேக்கு மரத்தினை பொருத்தாது வழங்குனர் கட்டில்களை வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் விளைவாக, ஏறத்தாழ ரூபா 98,000 தொகை வழங்குனருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வழங்குனரால் வழங்கப்பட்டிருந்த கட்டில்களிலும் சிற்றலுமாரிகளிலும் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டிருந்த போதிலும், பொருட்கள் குறித்துரைப்புகளிற்கு அமைவாகவும் சிறந்த தரத்துடனும் வழங்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்டு வேலைகள் பொறியியலாளர் சிட்டைகளை சான்றுறுதிப்படுத்தியிருந்தார். அக் கட்டில்களில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

- தேக்கு மரத்திற்குப் பதிலாக சிற்றலுமாரிகளின் நடு மறைப்புக்கு சப்பு மரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.
- சிற்றலுமாரிகள் முடிவுறுத்தல் சீராக காணப்படவில்லை.
- கைப்பிடிகளும் பூட்டுக்களும் சில சிற்றலுமாரிகளில் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**4.5 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) விளையாட்டு மைதான நிர்மாணம்**

விளையாட்டு மைதானத்திற்கு கிரவலை வழங்கி பரப்புவதற்கான ஒப்பந்தத்தினை பல்கலைக்கழகம் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கியிருந்ததுடன் 2013 செப்தெம்பர் 16 ஆந் திகதி வரை ஒப்பதகாரருக்கு ரூபா 749,100 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு வழங்குனர்களால் வழங்கப்பட்டிருந்த முகவரிகளில் அவ்வாறான வணிகங்கள் காணப்படவில்லை. அதன்படி, இந்த ஒப்பந்தத்திலிருந்து உச்ச நலனை பெற்றுக்கொள்வதற்காக மூன்று கூறு விலைகளும் வேறுபட்ட பெயர்களில் ஒத்த வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என்பது வெளிப்படையாகும்.

(ii) கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம், உப வேந்தரினால் ரூபா 250,000 இற்கு குறைவான எல்லையுடைய வேலை மதிப்பீட்டிற்கே அங்கீகாரம் வழங்க முடியும். ஆகையால், 43 கிரவல் ஏற்றப்பட்ட லொறிகளில் கிரவலை வழங்கி பரப்புவதற்காக ரூபா 249,572 இற்கான மதிப்பீடொன்றை பல்கலைக்கழம் தயாரித்திருந்தது. இருப்பினும், மேற்படி வேலையை பூரணப்படுத்தவதற்கு ரூபா 749,100 தொகை செலுத்தப்பட்டு 129 லொறிகளில் ஏற்றப்பட்ட கிரவல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, திணைக்களக் கொள்வனவுச் சபையிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதனைத் தவிர்ப்பதற்காக பல்கலைக்கழகம் வேலைகளை குறைத்து விலையிட்டு மதிப்பீட்டைத் தயாரித்திருந்தமை தெளிவாக காணப்பட்டது.

(iii) பல்கலைக்கழகத்தின் பௌதீக கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கோரிக்கையின் படி, கிரவலை வழங்கி பரப்பும் வேலைகள் மிக அவசர தேவையினைக் கருத்திற்கொண்டு 2013 செப்தெம்பர் 16 ஆந் திகதியன்று பூரணப்படுத்தப்படுதல் வேண்டும், மேற்படி வேலைகள் 2013 செப்தெம்பர் 16 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கைப்பந்தாட்ட திடல், கூடைப்பந்தாட்ட திடல் மற்றும் டென்னிஸ் விளையாட்டு திடல் என்பன தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இது வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மேற்படி வேலைக்காகச் செலவிடப்பட்டிருந்த தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது.

**(ஆ) நுழைவு வீதியினை புனரமைத்தல்**

எஸ்ஈயூஎஸ்எல்/சீடபிள்யூ&பீ/195(1)/2013 ஆம் இலக்க 2013 மார்ச் 20 ஆந் திகதிய ஒப்பந்த உடன்படிக்கையின் படி, 1.2 கி.மீ. நீளம் கொண்ட நுழைவு வீதியினை புனரமைத்தல் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு கையளிக்கப்பட்டு 2013 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரை ரூபா 23,088,431 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கும் ஒப்பந்த காரருக்கும் இடையில் 2013 மார்ச் 20 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை திகதிக்கு இரண்டு மாதங்களிற்கு முன்னரே ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(iii) ஒப்பந்த உடன்படிக்கையின் படி, 2013 ஏப்ரல் 09 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாண வேலைகள் பூரப்படுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், அது 2013 மே 09 ஆந் திகதியன்றே பூரணப்படுத்தப்பட்டிருந்து. ஆகையால், தாமதக் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 403,650 தொகை ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.6 பல்கலைக்கழக விடுதிகளை பதவியினருக்கு வழங்குதல்**

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வழிகாட்டல்களின் 6.6 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகத்தின் பிரமாணங்களின் பிரகாரம் பல்கலைக்கழக விடுதிகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். இருப்பினும், 12 குடும்ப விடுதிகளிலும் 08 தனியாள் விடுதிகளிலும் குடியிருந்த கல்விசார் பதவியணியினர் பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கையில் கைச்சாட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம், குடியிருக்கும் விடுதிகளின் வாடகை குடியிருப்போரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், பல்கலைக்கழக விடுதிகளில் குடியிருக்கும் கல்விசார் பதவியணியினரிடமிருந்து வாடகை கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழ விடுதிகளிற்குரிய 2010 சனவரி முதல் 2013 நவம்பர் வரையான காலத்திற்கான ரூபா 902,741 தொகையான மின்சாரக் கட்டணங்களை பல்கலைக்கழகம் செலுத்தியிருந்தது. இருப்பினும், தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவின் பிரகாரம், மின்சாரக் கட்டணங்களை குடியிருப்போரிடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 ஏப்ரல் 11 ஆந் திகதி வரை பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழக விடுதியில் வசித்து வந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் வழிகாட்டல்களின் 8.3 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக பிரமாணங்களின் பிரகாரம் பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து முன்கூட்டிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது அவரது சொந்தப் பணத்தில் காற்றுச் சீராக்கியொன்றை பொருத்தியிருந்தார்.

**4.7 நூலக நிர்வாகம்**

கல்விசார் மற்றும் கல்விசாராத பதவியணியனரால் எடுத்துச்செல்லப்பட்டிருந்த புத்தகங்கள் 01 முதல் 04 ஆண்டுகள் வரையான காலவீச்சிலமைந்த தாமதத்துடன் மீளளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், 2014 யூலை 27 ஆந் திகதிய ‘‘செனற்’’சபை கூட்டக் குறிப்பின் பிரகாரம் தண்டப்பணங்களை கணிப்பிட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.8 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 88 வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீளாய்வாண்டின் இறுவரையிலேனும் பல்கலைக்கழம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 05 பீடங்களில் பேராசிரியர்கள், இணைந்த பேராசிரியர்கள் போன்ற 08 வெற்றிடங்கள் காணப்பட்டன. இருப்பினும், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பாதிக்கின்ற அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைக்கழம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2014 யூன் 03 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினங்களிற்கிடையில் 52 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது காட்டப்படுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்கள் மற்றும் முற்பணைங்களை அறவிடுதல்
(இ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு
(ஈ) பதிவேடுகளை பராமரித்தல்